ஆறாவது உலக மகாநாட்டுச்
சிறப்பிதழ்

ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின்
காலாண்டு இதழ்

# சாயி மார்க்கம்

மலர்: 3 தை, மாசி, பங்குனி - 1996 இதழ்: 5

பொருளடக்கம்

பகவானின் அருளுரை - இலக்கை அடையும்வரை...... 1
ஆறாவது உலக மகாநாட்டின் தீர்மானங்களும் சிபார்சுகளும் 3
உங்களோடு நாம் 18
புட்டபர்த்தியில் பெருவிழா 19
புனிதநகர் புட்டபர்த்தியில் 20
1996 ஆன்மீக நாட்காட்டி பின் அட்டை (உள்)
வழிகாட்டும் அருள்மொழிகள் பின் அட்டை (வெளியே)

---

வருடச் சந்தா (தபாற் செலவுடன்)
இலங்கையில் ரூ. 80/-
வெளிநாடுகளில் US$ 7/-
காசோலை, பணக் கட்டளைகள்: Co-ordinating Committee
*Sri Sathya Sai Organisation*
*(Northern Zone)*

'வடபிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு' என்ற பெயரில் எழுதப்பட்டு ஆசிரியர் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

---

ஆசிரியர் குழு
Dr. எம். கே. முருகானந்தன் (ஆசிரியர்)
ஸ்ரீ கி. சிவநேசன் (உதவி ஆசிரியர்)
ஸ்ரீ S. R. சரவணபவன்
ஸ்ரீ R. வசந்தசேனன்

சகல தொடர்புகளும்:
ஆசிரியர், சாயி மார்க்கம்
Dr. எம். கே. முருகானந்தன்
மருதடி, பருத்தித்துறை,
ஸ்ரீலங்கா.

பகவானின் அருளுரை

# இலக்கை அடையும்வரை சாதனையைத் தொடருங்கள்

எப்பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டிய மூன்று மகா வாக்கியங்கள் உண்டு.

1) கடவுளில் நம்பிக்கை வை — தெய்வ பிரீதி
2) பாவத்திற்குப் பயப்படு — பாப பீதி
3) சமூகத்தில் பண்புகளைக் கடைப்பிடி — சமூகநீதி

இந்த மகா வாக்கியங்களை உறுதியாகக் கடைப்பிடிக்கும் மனிதனே உண்மையான மனிதன் என்று அழைக்கப்பட வேண்டும். சத்திய சாயி நிறுவனத்திலுள்ள ஒவ்வொரு பணியாளரும் இவற்றை அவருடைய வாழ்க்கையில் உண்மையாகக் கடைப்பிடித்துத் தமது வாழ்க்கையைப் புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுதான் வாழ்க்கையின் இலட்சியமாக அமைய வேண்டும்.

## ஆனந்தம் எங்கேயிருக்கிறது?

மனிதன் ஆனந்தத்தை முடிவில்லாமல் தேடிக் கொண்டே இருக்கிறான். ஆனந்தத்தை அனுபவிப்பதற்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக அவன் இருக்கிறான். ஆனால் உண்மையான ஆனந்தம் எங்கே காணப்படுகிறது? ஆனந்தம் மனிதனுக்குள்ளேயே இயற்கையாக அமைந்துள்ளது. இந்த உண்மையை உணராமல் இதனை வெளிப் பொருட்களில், தனது அறியாமையால் தேடிக் கொண்டே இருக்கிறான். வெளிப் பொருட்களில் ஆனந்தத்தை தேடும் முயற்சி கானல் நீரில் தாகத்தை தீர்க்க முயற்சிப்பது போலாகும் என்பதை உணரும்போது அவன் தனது மனத்தை உள் நோக்கித் திருப்பி, ஆனந்தத்தை உள்ளேயே அனுபவிப்பான்.

## சத்தியமே தெய்வம்

சத்தியம் தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை. சத்தியம் தான் கடவுள். உனது சுய நலத்தையும் அகங்காரத்தையும் சத்தியம் என்றபீடத்தில் தியாகம் செய்து பக்தியுடன் கடமைகளை செய்ய வேண்டும். உனது உடலை கடவுளின் புல்லாங்குழலாக்கு. அவன் தெய்வீக இசையை அதனூடாக இசைப்பான்

## சாந்தி தெய்வீகப் பண்பு

சாந்தியென்பது ஓர் தெய்வீகப் பண்பு. சீரிய பண்புகள் இல்லாத இருதயத்தில் அது வசிக்க முடியாது. தூய இருதயத்தில் மட்டுமே சாந்தி நிலவும். சுயநலம் நிறைந்த இடத்தில் சாந்தி தங்காது. அகங்காரத்தாலும் ஆடம்பரத்தாலும் களங்கமடைந்த இடத்தை விட்டு எட்டிவிலகிவிடும். பக்தர்களுக்கு அது ஒரு பிரகாசமான ஆபரணமாகும். தன்னலமற்ற சேவையே சாந்தியுடைய மனிதனின் ஒளி பொருந்திய ஓர் நற்பண்பாகும்.

## சாயி நிறுவனத்தில் நீங்கள்

ஆகவே எங்கள் நிறுவனத்தில் சுயநலத்திற்கும், பகட்டிற்கும், தற்பெருமைக்கும், வெறுப்புக்கும், பொறாமைக்கும் இடமில்லை எல்லோரையும் ஒரே கடவுளின் பிள்ளைகளாக பேண வேண்டும். தெய்வத் தந்தையின்

அருளைப் பெறுவதற்காக எல்லோரும் ஒருங்கிணைந்து உழைக்க வேண்டும். நிறுவனத்திலுள்ள நீங்கள் உங்களுக்குள் தப்பபிப்பிராயத்திற்கும், வேற்றுமைகளுக்கும் இடம் கொடுக்காதீர்கள்.

ஒற்றுமையாக உழையுங்கள், தெய்வத்தை நேசியுங்கள். உதவியற்றவர்களுக்கும் தேவை உள்ளவர்களுக்கும் சேவை செய்து உங்கள் வாழ்வைப் புனிதமாக்குங்கள்.

பணப்பேயின் அடிமையாக மாறாதீர்கள். எமது நிறுவனத்துள் அரசியலைக் கொண்டு வர இடமளியாதீர்கள். நிறுவன வேலைகளை நிறைவேற்ற அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவோ அல்லது தங்கியிருக்கவோ வேண்டாம். உங்கள் தகுதிக்குத் தக்கபடி சமுதாயத்திற்கு உதவி செய்யுங்கள். உங்களுக்குப் பணம் தேவைப்படும் போது உங்களுக்குள் அந்தப் பணத்தை தரக்கூடிய தகுதி உள்ளவர்கள் அதைத் தர முன்வர வேண்டும். எந்தநிலையிலும் கேவலமான அன்பளிப்புப் பட்டியல் அனுப்பும் முறையை திருத்த வேண்டும். சமூகத்திற்கு சேவை புரிவதற்காக உங்கள் உடல் மனம் மற்றும் எல்லா உறுப்புக்களையும் புனிதமாக வைத்திருங்கள்.

இதைத்தான் தெய்வம் உங்களிடம் எதிர்பார்க்கிறது. உலகியல் கவர்ச்சிகள், பெயர் புகழுக்கு எடுபடாதீர்கள் உங்களுக்குள் ஒற்றுமையையும் ஒத்திசைவையும் வளர்த்துக்கொள்ளுங்கள். விருப்பு வெறுப்புக்களைக் கைவிடுங்கள், சமூகத்திற்குச் செய்யும் சேவையை கடவுளுக்கு செய்யும் சேவையாக மதியுங்கள். நல்ல சேவகனாக இல்லாதவன் ஒரு நல்ல தலைவனாக வரமுடியாது. பதவி, அதிகாரம் ஆகியவற்றிற்குப் பின்னால் ஓடாதீர்கள். சேவை மூலமும் சத்தியத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும் உங்கள் இருதயத்தை விசாலப்படுத்துங்கள்.

## இறுதி இலக்கு

புனிதமான சேவைமட்டுமே மனிதனைத் தெய்வத்திடம் இட்டுச் செல்லும். கடவுளை உணர்தலே உங்கள் வாழ்க்கைப் பயணத்தின் நோக்கம். பயணத்தின் பாதையில் உங்கள் காலத்தை வீணக்காதீர்கள். இலக்கை அடையும் வரை உங்கள் சாதனையைத் (ஆன்மீக சாதனை) தொடருங்கள். உங்கள் பெறுமதிமிக்க நேரத்தை உலகியல் அந்தஸ்துகளைத் தேடுவதில் செலவு செய்யாதீர்கள்.

உலகில் எத்தனை தடைகளை நீங்கள் எதிர் நோக்கினாலும், உங்கள் உடம்பிற்கு என்ன நடந்தாலும் இறைவனைத் தேடும் முயற்சியிலிருந்து விலகாதீர்கள். இதற்காகத்தான் உங்களுக்கு பிரகாசமான விவேகம் வழங்கப்பட்டிருக்கிறது. அற்ப ஆயுளுடைய உலகியற் பொருட்களுக்களுக்காகத் தங்கள் வாழ்நாளைப் பயன்படுத்துபவன் மிருகத்தின் நிலைக்கு தன்னைத் தாழ்த்திக் கொள்கிறான். நீங்கள் தெய்வ நிலைக்கு உங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும். இதுதான் உங்கள் உயர்ந்த இலட்சியமாகும்.

(இன்றைய தேவைகருதி 1988ம் ஆண்டு புதுவருட தினத்தில் பகவான் ஆற்றிய உரையின் சுருக்கம் தரப்பட்டுள்ளது)

> தவறிழைத்த, வழி தவறிய குழந்தைகளுக்காகத்தான் நான் வந்துள்ளேன். புனிதமானவர்களாக இருந்தால் தான் என் அன்புக்கு பாத்திரமாக முடியும் என்று நீங்கள் கூறுவது உடல் நலத்தோடு இருப்பவனுக்குத்தான் வைத்தியரின் உதவி தேவை என்று கூறுவதைப் போன்றது.
>
> — பாபா

சத்ய சாயி நிறுவனங்களின் (வெளிநாடு)

6 வது உலக மகா நாட்டின்

# தீர்மானங்களும் சிபார்சுகளும்

## விடயம்:- ஆன்மீக ரீதியான நிலைமாற்றம்

(எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் தன்னலமற்ற அன்பு)

18 – 24 நவம்பர் 1995

பிரசாந்தி நிலையம்

### அறிமுகம்

1995 ஆம் ஆண்டு நவம்பர் 18 – 21 வரையான காலப்பகுதியில் சத்யசாயி நிறுவனங்களின் ஆறாவது உலக மகாநாடு பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்றது. அதி முக்கிய நிகழ்வான பகவான் சத்யசாயி பாபாவின் 70 தாவது பிறந்த தினத்திற்கு முன்னோடியாக இந்த மகாநாடு அமைந்தது.

சத்ய சாயி நிறுவனத்தைப்பற்றி பகவான் பாபா கூறியிருப்பதாவது:

> "இந்த நிறுவனத்திற்கு சாயியின் பெயர் வைத்ததன் நோக்கம், கடவுள் நம்பிக்கையையும் தெய்வத் தன்மையையும் மனித குலத்திடையே வளர்த்துப் பரப்புவது மட்டுமே. சமய, ஆன்மீக வாழ்வினூடாக உன்னத சிந்தனைகளிலும் மேலான இலட்சியங்களிலும் மனித மனத்தை திருப்புவது ஒன்றே இந்த நிறுவனத்தின் குறிக்கோளாகும்."
>
> — பாபா.

137 நாடுகளைச் சேர்ந்த சத்யசாயி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூடினர். பகவான் பாபா தந்த அடிப்படை ஆன்மீகக் கருத்துக்களே இம் மகாநாட்டின் நடவடிக்கைகளை வழிநடத்தின. ஒவ்வொரு பிரதிநிதியும் இம்மாநாட்டில் தாராளமாகப் பங்கு கொள்வதற்கான போதிய முயற்சிகள் எடுக்கப்பட்டன. இறுதித் தீர்மானங்களை தொகுப்பதற்குமுன் எல்லாப் பிரதிநிதிகளது கருத்துக்களும் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு மதிப்பிடப்பட்டது.

மகாநாட்டு நிறைவில் பகவான் ஆற்றிய இறுதி அருளுரையின்போது கட்டுப்பாடு (Discipline) பக்தி (Devotion) கடமை (Duty) ஆகிய மூன்றும் ஆன்மீக நிறுவனத்திலுள்ள ஒவ்வொரு பக்தனுக்கும் அத்தியாவசியமானவை என்று கூறினார். தீர்மானங்களை எடுக்கும் போதும், செயற்படுத்தும் போதும் அவை தனது தெய்வீகச் செய்திக்கு அமைவாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இது சம்பந்தமாக பகவான் கூறியதாவது,

> ''இந்த மகாநாட்டில் நாங்கள் கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் வடிவமைத்துள்ளோம். கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் அத்தியாவசியமானவை. நாங்கள் தீர்மானங்களையும் இங்கு நிறைவேற்றியுள்ளோம். நாம் எமது நிறுவனத்தின் செயற்பாடுகளை இந்த விதிமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அமைய நடாத்த வேண்டும். அத்துடன் எமது தீர்மானங்களையும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். உலகத்தில் இத்தகைய பல மகாநாடுகள் நடைபெறுகின்றன. தீர்மானங்களை நிறைவேற்றிய அந்தக்கணமே அவற்றை அனுஷ்டிக்கத் தொடங்க வேண்டும். இதுதான் ஆன்மீக ஒழுங்குமுறையாகும்''.
>
> — பாபா.

பகவானின் நெறிகாட்டலுக்கு இணங்க எல்லா சாயி பக்தர்களும் தமது சாயி நிறுவனங்களில் இந்தத் தீர்மானங்களைக் கையாளவேண்டும். நிலைய நிர்வாகிகள் குறித்த தீர்மானங்களை விசுவாசத்துடனும், திறமையுடனும் நிறைவேற்ற தம்மாலியன்ற எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

ஆறாவது மகாநாட்டின் தீர்மானங்கள் 3 பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன.

1. பகவான் பாபாவின் தெய்வீக உபதேசங்களும், கட்டளைகளும்.
2. ஆறாவது உலக மகாநாட்டின் பிரதான தீர்மானங்கள்.
3. ஏனைய தீர்மானங்கள்.

மகாநாட்டு அங்கத்தவர்கள் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர்.

1. ஆன்மீகம்.
2. கல்வி.
3. சேவை.

ஒவ்வொரு பிரிவும் நான்கு உபகுழுக்களாகப் பிரிக்கப்பட்டன. ஆறாவது உலக மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் வருமாறு:

A) <u>ஆன்மீகப்பகுதி</u> (ஆன்மீக சாரத்தை குறைக்காமல் எமது செயற்பாடுகளை வெவ்வேறு கலாச்சாரங்களுக்கு ஏற்ப ஆக்கிக் கொள்ளும் முறை)

1) பஜனை, தியானம், பொதுக்கூட்டங்கள் ஆகியன மூலம் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளல்.
2) ஆன்மீகமும் சமயமும் - இதன் விளைவும் நடைமுறைப் படுத்தலும்.
3) கல்விவட்டம் - பகவான் பாபாவின் போதனைகளை விளங்கிக் கொள்வதற்கு, பொருத்தமுள்ளதாகவும் கவர்ச்சியுள்ளதாகவும் நடத்துதல்.
4) சாயி நிலைய நிர்வாகம் - நிர்வாகிகளின் கடமைகளும் பொறுப்புக்களும், புதிதாக வருபவருக்கு நடைமுறைகளை விளக்குதல்.

B) <u>கல்விப் பகுதி</u> (பிரச்சினைகளைப் பரிசீலிப்பதும் பரிகாரம் காணலும்)

1. குழந்தைகளுக்கான மனித மேம்பாட்டு சத்திய சாயி ஆன்மீகக் கல்வி. (பாலவிகாஷ்)
2) சமுதாயத்திலுள்ள வளர்ந்தோருக்கான சத்திய சாயி மனித மேம்பாட்டு நிகழ்ச்சிகள்.

3) மனித விழுமியக் கல்வி நிகழ்ச்சிகளை கல்வித் தாபனங்களில் நடைமுறைப் படுத்தல்.

4) இளைஞர்களின் எதிர்காலத் தலைமைத்துவத்துக்கும் அவர்களிடையே ஆன்மீக ரீதியான நிலைமாற்றத்தை ஏற்படுத்தவும் நிகழ்ச்சிகள் அமைத்தல்.

C) சேவைப்பகுதி (செயற்திட்டங்களை ஆராய்தல்)

1) சாயி நிலையங்களில் சேவைத்திட்டங்களும், ஆன்மீகம், கல்வி ஆகிய குழுக்களுக்கு உதவுவதும்.

2) சேவைத் திட்டங்களில் பக்தர்களை கூடியளவு பங்கு கொள்ளத் தூண்டுதல்

3) மனித விழுமியங்களை மேன்மையடையச் செய்வதற்கு. சாயி இயக்கத்தின் சேவைத் திட்டங்களை அமைத்தல்.

4) தேவைப்படுவோருக்கான சேவைத் திட்டங்களில் சமுதாயத்தை ஈடுபடுத்தல்.

இந்த மகாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் எல்லா சாயி நிறுவனங்களுக்கும், அதாவது அவை ஏற்கனவே அமைக்கப்பட்டு திடமாக இயங்கும் நிலையங்களுக்கும் அல்லது புதிதான சாயி குழுக்களுக்கும் பொருந்தும்.

இவற்றிற்கு மேலாக கலந்துரையாடலுக்கு உதவுமாறு உபகுழுக்களின் நடத்துனர்க்கு தேவையான வழிமுறை அடங்கிய அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

## ஆறாவது உலக மகா நாடு பகுதி I

# பகவான் பாபாவின் தெய்வீக வழிகாட்டல்களும் கட்டளைகளும்

ஆறாவது உலக மகாநாட்டிற்கு முற்பட்ட தினங்களில் ஆன்மாவை எழுச்சியூட்டும் பல தெய்வீக உரைகளை பகவான் பாபா வழங்கினார். இத்தெய்வீக உரைகள் மேலதிக வழிகாட்டல்களை அளித்தன. சாயி பக்தன் என்பதன் சாராம்சத்தையும் சாயி நிறுவனத்திற்கான செயல் நெறியையும் அவை அழகாக விபரிக்கின்றன.

பகவான் பாபாவின் இந்த தெய்வீக வழிகாட்டல்களையும், கட்டளைகளையும் ஒவ்வொரு நாட்டிற்கும் கொண்டு செல்ல வேண்டும். சாயி நிறுவனத்தின் எல்லா நிலையிலுமுள்ள நிர்வாக உறுப்பினர்களும், இவற்றை ஒவ்வொரு சாயி நிலையமும், சாயி பக்தனும் அறியச் செய்வதை உறுதிப்படுத்துவதுடன், அவற்றை அவர்கள் கடைப்பிடிக்கவும் ஊக்குவிக்க வேண்டும்.

தெய்வீக வழிகாட்டல்கள் 9* முக்கிய குறிப்புக்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

1. உண்மையான சாயி பக்தனானவன் பகவான் பாபாவின் தெய்வீகத் தன்மையில் பூரணமான முழு நம்பிக்கை

வைத்திருக்க வேண்டும். பகவானின் போதனைகளையும், வழிகாட்டல் களையும், எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றினாலும் முழு மனதோடு பின்பற்றலின் மூலமே தெய்வ அனுக் கிரகத்தைப் பெற முடியும் என்பதி லும் நம்பிக்கை கொண்டிருக்க வேண் டும்.

2\. ஒவ்வொரு சாயி பக்தனினதும் வாழ்க் கையின் நோக்கம், சத்தியத்தைத்தேடி அறிவதுதான். அகத்திலும் புறத்தி லும் நிறைந்திருக்கின்ற இணையற்ற தெய்வீகத்தை உணர்வதே இறுதி யான ஞானமாகும். ஒவ்வொரு மனி தனுக்குள்ளும் உறைந்திருக்கும் சத்யம் என்ற இறை உணர்வை வெளிப்படுத் துவதை நோக்கமாகக்கொண்ட சத்ய சாயி நிறுவனத்தின் செயற்பாடுகளில் முழு மனதோடு ஈடுபடுவதன் மூலமே சத்யத்தை உணரமுடியும். சத்திய உணர்வானது அக உணர்விலிருந்து மனச்சாட்சியாகி பின்பு தன்னுணர் வாக மாறி நாளாந்த வாழ்க்கையில் ஊறிப் பரவுவதற்கு சாயி நிறுவனங் கள் ஓர் கருவியாக வேண்டும்.

3\. சமூக சாதனையில் ஈடுபட்டு அதன் மூலம் குடும்பசாதனையைப் படிப்படி யாகச் செழுமைப்படுத்தும் உன்னத மானதும் முழுமையானதுமான மேடையாக சத்யசாயி நிறுவனத்தை ஒவ்வொரு சாயி பக்தனும் நம்பி ஏற் றுக் கொள்ள வேண்டும். கடவுளை நோக்கிய பயணத்தை ஒருவர் தனித்து நின்று மேற்கொள்ள முடியாது. ஆனால் பக்தர்களுக்கும் சமூகத்திற் கும் இடையே செயற்பாடு அவசியமாகிறது. இதற்காக, சத்ய சாயி நிறுவனம் பாபாவின் பக்தர் களுக்கு ஒரு களமாக இயங்குகிறது.

4\. கோபம், பேராசை, பொறாமை ஆகிய குணங்களை சாயி பக்தர்கள் எந்தக் கஷ்டங்கள் நேரிடினும், கண் டிப்பாகத் தவிர்க்க வேண்டும். கோப மும் பொறாமையும் ஒருவனது ஆன் மீக வாழ்க்கையை மாத்திரமன்றி, அவரது ஆரோக்கியத்தையும் சுகவாழ் வையும் கூட தீங்கு விளைவித்துச் சேதப்படுத்துகின்றன.

5\. பகவான், சாயி நிறுவனத்தினுள் காணப்படும் முரண்பாடுகளை அறிந்து பின்வரும் வழிகாட்டலை வழங்கு கின்றார்:

> ''கடந்தகாலம் முடிந்துவிட்டது, முடிந்ததை மறந்துவிடு. புதிதாக ஆரம்பி. இக்கணத்திலிருந்து கோபமும் பொறாமையும் சற்றுமில்லாத வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்.
>
> உனது இதயத்தை வெண்ணையைப் போல மெதுமையாக்கு.
>
> உனது மனத்தை நிலாவொளியைப்போல் சாந்தமாக்கு.
>
> உனது வார்த்தைகளைத் தேனைப்போல் இனிமையாக்கு.''
>
> — பாபா.

6. SAI (சாயி) எனும் பதத்தின் அர்த்தத்தை சாயி பக்தர்கள் புரிந்து கொண்டு அதனை ஒரு வழிகாட்டியாக அல்லது ஒளிவிளக்காகத் தமது நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும்.

S என்ற எழுத்து Service - சேவையை குறிக்கும். (கர்மா)

A என்ற எழுத்து Adoration - பூஜித்தலை குறிக்கும். (பக்தி)

I என்ற எழுத்து Illumination - தெளிவை குறிக்கும். (ஞானம்)

எனவே பகவானின் நாமமாகிய SAI (சாய்) என்பது ஆன்மீக பெருமுயற்சியின் மூன்று முக்கிய மார்க்கங்களான கர்மயோகம், பக்தியோகம், ஞான யோகம் ஆகியவற்றின் இணைப்பையும் சங்கமத்தையும் குறிக்கின்றது. இந்தக் கருத்தானது சாயிபக்தர்களின் நாளாந்த வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும். எனவே சாயி பக்தர்கள் தமது எல்லாப் பணிகளையும் கடவுளுக்கு அர்ப்பணமாகச் செய்ய மனதார முயற்சிக்க வேண்டும். எல்லா உயிரினங்களும் பகவானின் பிரதிபலிப்புதான் என்பதை எப்பொழுதும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்வதன் மூலம் சாயி பக்தர்களாகிய நாம் பக்தியையும் அன்பையும் மனதில் பதிய வைக்க முடியும்.

7. பகவான், SAI என்பது பின் வரும் கருத்தையும் குறிக்கும் என ஞாபகப்படுத்தினார்.

S — ஆன்மீக ரீதியான நிலைமாற்றம். (Spritual Transformation)

A — சரியான பாதையில் தொடர்ந்து செல்வதற்கு எமது சமூக தொடர்புகளில் (Associations) மாற்றங்கள்.

I — தனிப்பட்ட நிலைமாற்றங்களும் (Individual Transformation) முன்னேறுதலும் பக்தர்கள் பூரணத்துவத்தை அடைவதற்கான ஆன்மீகப் பாதை இதுதான்.

8. சாயி பக்தன் தனது வாழ்விலிருந்து விரும்பத்தகாத எல்லாப் பழக்கங்களையும் மனப்பாங்குகளையும் களைவதற்கு தன்னாலான முழுமுயற்சி எடுக்க வேண்டும். வாழ்க்கையானது புனிதமான உயர்வான சிந்தனைகளினால் தொடர்ந்து வளப்படுத்தப்பட வேண்டும்.

9. சாயி பக்தர்கள் தமது வாழ்விலே மனித விழுமியங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை அஹிம்சை ஆகியன வாழ்வின் 5 உயிர் மூச்சுக்கள் போலாகும். தன்னலமற்ற தூய அன்பு வாழ்வின் ஆதாரக் கல்லாக அமைய வேண்டும். எண்ணத்திலும் சொல்லிலும் அன்பு என்பது சத்தியமாகும். செயலில் அன்பு தர்மமாகும். உணர்வில் அன்பு (அன்பினால் நிறைந்த இதயம்) சாந்தியாகும். எல்லாவற்றையும் சூழ்ந்தும் உள்ளடக்கியும் இருக்கின்ற நிறைந்த அன்பு அஹிம்சையாகும். பகவான் தொடர்ந்து அறைகூவும் மேற்படி வேண்டுகோளை வெறுமனே மேற்கோளாகக் கூறிக்கொண்டிருக்காமல் சாயி பக்தர்கள் அதனைச் செயல்முறைப் படுத்த வேண்டும்.

ஒரு பக்தன் தன்னை உணர்வது ஆழ்ந்து சிந்திப்பது ஆகிய பழக்கங்களை மனதில் பதிக்க வேண்டும். பகவான் பாபாவின் வழிகாட்டல்களைப் பிரதிபலிப்பதும் அவற்றை நமது நாளாந்த வாழ்க்கையில் எண்ணம், சொல், செயல்களூடாக எவ்வாறு கடைப்பிடிக்கப் போகிறோம் என்பதுதான். பிரசாந்தி நிலையத்தில் நாம் தங்கியிருக்கும் போதும் சரி வீடுகளுக்குத் திரும்பியபோதும் சரி நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய சாதனையாகும். எமது நாளாந்த வாழ்க்கையில் சமத்துவ உணர்வை அல்லது பற்றற்ற தன்மையை (உள்ளசமநிலை) பெறுவதுதான் எமது தொடர்ச்சியான ஆன்மீக வளர்ச்சிக்கான சாதனையாகும்.

*பக்கம் 5ல் பிரசாந்தி நிலைய வெளியீட்டில் 10என இருப்பது 9 என வெளியிடப்பட்டுள்ளது
— ஆசிரியர்

# ஆறாவது உலக மகாநாடு பகுதி II
# பிரதானமான தீர்மானங்கள்

சாயி நிறுவனத்தின் ஆன்மீகம், கல்வி, சேவை ஆகிய 3 பகுதிகளின் கீழ்க்கூடிய 12 உப குழுக்களின் தீர்மானங்கள் வருமாறு:

## ஆன்மீகம்

ஆன்மீகப் பகுதியின் பிரதான தீர்மானங்கள் வருமாறு:

1. சாயி நிலையங்களின் எல்லா உறுப்பினர்களும், முக்கியமாக நிலைய உத்தியோகத்தர் தமக்குள்ளும், சாயி நிலையங்களுக்கிடையேயும் அன்பையும் ஒத்திசைவையும் பேண வேண்டும். பக்தர்களுக்கிடையேயும், சாயி நிலையங்களுக்கிடையேயும் ஒத்திசைவின்மைக்கு ஒரு காரணம் 9 ஒழுக்க நெறிக்கோட்பாடுகளையும், 10 அன்புக்கட்டளைகளையும் உணர்ந்து கடைப்பிடிக்காமையே என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2. சாயி நிலையங்களில் நடைபெறும் எல்லாச் சாதனைகளிலும் சர்வமத ஒற்றுமையை வலியுறுத்த வேண்டும். முக்கியமாக, பல மதங்கள் மொழிகள் வழக்கத்திலுள்ள இடங்களில் அந்த சமூகத்தவரின் மொழியிலேயே பெரும்பான்மையான நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும். அந்த நாட்டின் முக்கிய மதத்தின் விழாக்களை எல்லா சாயி நிலையங்களிலும், பொதுவாக சாயி நிறுவனத்தினாலும் அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

3. பகவானின் போதனைகளை விளங்கிக் கொள்வதற்கு சிறந்த வழிகளுள் கல்வி வட்டம் சிறப்பானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கல்வி வட்டம் விளக்கத்தைக் கொடுப்பதாகவும், கவர்ச்சியுடையதாகவும் அங்கத்தவரின் நாளாந்த வாழ்க்கையில் பயன்படக் கூடியதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவது சாயி நிலையத் தலைவர்களின் கடமையாகும்.

4. பகவான் பாபாவின் தெய்வீகச் செய்திகளை சாயி பக்தர்கள் பரப்புவதற்குச் சிறந்த வழி தன்னலமற்ற அன்பையும் சேவையையும் அனுசரித்து, சுய உதாரணமாகத் திகழ்வதே ஆகும். பகவான் பாபா ஒருபோதும் பிரசாரத்தை விரும்பவில்லை. தனது பெயரை நிறுவனத்திற்குக் கொடுத்ததன் நோக்கமே மதமாற்றத்தைத் தவிர்க்க வேண்டும் என்ற ஆணையைப் பக்தர்களுக்கு வழங்கவே ஆகும். அல்லாமலும் அவருடைய உலகளாவிய செய்தி எங்குமுள்ள எல்லா மக்களின் உயர்வுக்கே ஆகும். ஆகவே சத்யசாயி நிறுவனம், பகவானின் வாழ்க்கை, அவரின் செய்திகள், அவர் அருளிய மகத்தான கல்வித் திட்டம், மனிதாபிமான செயற்பாடுகள், அவருடைய பெயரைத் தாங்கிய நிறுவனம் ஆகியவற்றை விளக்குவதற்குப் பொதுக் கூட்டங்களை அனுமதித்துள்ளது.

## கல்வி

கல்விப் பகுதியின் பிரதான தீர்மானங்கள் பின்வருமாறு:

1. பகவான் பாபாவினால் அருளப்பட்ட, சாயி பக்தர்களின் பிள்ளைகளுக்கான ஆன்மீகக் கல்வித்திட்டம் "சாயி

ஆன்மீகக் கல்வி'' (Sai Spiritual Education) என்று அழைக்கப்படும். 'பாலவிகாஷ்' என்ற பதம் இனிமேல் இந்தியாவுக்கு வெளியே பாவிக்கப்பட மாட்டாது. சாயி பக்தர்களல்லாதவர் களுடைய பிள்ளைகளுக்கான ஆன்மீகக் கல்வி ''சத்திய சாயி மனித மேம் பாட்டு கல்வி'' (Sathya Sai EHV) என அழைக்கப்படும். சத்யசாயி மனித மேம்பாட்டுக் கல்வி இரண்டு பிரிவுக ளாக இருக்கும்.

i) அரசாங்க பாடசாலைகளில் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

ii) தனியார் பாடசாலைகளிலும், சமு தாயத்திலும் நடைமுறைப்படுத் தல்.

இந்த இரண்டு திட்டங்களிலும் ஆசிரி யர்கள் சரியான முறையில் பயிற்றப் பட்டு சரியான முறையில் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

2. சகல நாடுகளுக்குமான சாயி ஆன்மீகக் கல்வித் திட்டத்திற்குச் சர்வதேச ரீதி யான வழிகாட்டல்கள் தயாரிக்கப் படும். எவ்வாறாயினும் அந்த நாட்டு சமய, கலாச்சார சம்பிரதாயங்களுக்கு ஏற்றவாறு மேலதிக வழிகாட்டல்கள் அந்தந்த நாட்டு நிறுவனத்தினால் சேர்த்துக் கொள்ளப்படலாம். இப்ப டிப்பட்ட எல்லா வழிகாட்டல்களிலும் ஆசிரியர்கள் தாங்கள் கற்பிற்கும் மேம் பாடுகளை நடைமுறைப்படுத்தும் உதா ரண புருஷர்களாகத் திகழ வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண் டும்.

3. பகவான் பாபா சத்யசாயி EHV திட் டம் பிள்ளைகளுக்கே உரியதென அறி வுறுத்தியுள்ளார். வளர்ந்தோரைப் பொறுத்தவரை இது EHV அல்ல; 3HV என்று கூறுகிறார். (3HV என் பது HANDS, HEAD, HEART அதா வது உடம்பு, மனம், ஆத்மாவைக் குறிக்கும்) வேகமான மாற்றங்களால் மனித மேம்பாடுகள் தாழ்வு நிலையை அடைந்துள்ளன. இதனைக் கட்டுப் படுத்துவதற்கு உரிய மார்க்கம், சாயி மனித மேம்பாடுகளைப் பல துறைக ளிலிருக்கும் — வியாபாரம், அரசியல், நிபுணத்துவத் தொழில்கள், சாதா ரண தொழிலாளி முதலியோர் — போன்ற சமூகத்திலுள்ள எல்லாத் துறைகளிலும் உள்ள இளைஞர்களும் வளர்ந்தோருக்கும் தெரியப்படுத் துவதே. இதனைக் கருத்தரங்குகள், மகாநாடுகள் போன்ற திட்டங்கள் மூலம் செயற்படுத்தலாம்.

4. வாலிபர் பிரிவு அல்லது இளம் வயதி னர் பிரிவு தேசிய, பிரதேச, நிலைய மட்டங்களில் உருவாக வேண்டும். 16 வயது தொடக்கம் 21 வயது வரை யான வாலிபர்களையும் 22 வயது தொடக்கம் 35 வயது வரையான இளம் வயதினரையும் ஈடுபடுத்த இது உதவும். வாலிபர், இளம் வயதினர் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதன் நோக்கம் இளைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து அவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தவே. இதன் மூலம், இன் றைய உலகில் மேம்பாடுகளை அடிப் படையாகக் கொண்ட, மகிழ்ச்சியான மாற்று வாழ்க்கை வாழ முடியும் என அவர்களுக்குக்காட்ட முடியும்.

5. உலக இளைஞர் மகாநாடு பிரசாந்தி நிலையத்தில் 1997 ல் நடைபெற ஏற் பாடாகி உள்ளது.

## சேவை

சேவைப் பகுதியின் பிரதான தீர்மானங்கள் பின்வருமாறு:

1. சாயி நிலையங்களினால் மேற்கொள் ளப்படும் சேவைகள் அனைத்தும் சமூ கத்திலுள்ள உண்மையான தேவை உள்ளவர்க்கே வழங்கப்பட வேண்டும்.

ஆகவே சாயி நிலையங்களின் சேவை உண்மையான தேவையுள்ளவர்களுக்கே சென்றடையக் கூடியதாக, தேவையானவர்கள் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பக்தர்களின் வசதிக்காகச் சேவைகள் மேற்கொள்ளக் கூடாது.

2. சாயி நிறுவனங்களின் நடவடிக்கைகளில், முக்கியமாக சமூகத்திற்கு வழங்கப்படும் சேவைகளில், துறைசார்ந்த நிபுணத்துவத்தை அதிகளவில் பயன்படுத்த வேண்டும். நிலையங்கள் அரை ஆண்டு அல்லது முழு ஆண்டுத் திட்டங்களை வகுக்க வேண்டும். இத்திட்டங்களில் பக்தர்கள் பங்குபற்றக் கூடியதான நாட்டத்தையும், பயிற்சியையும் நிலையங்கள் வழங்க வேண்டும். சாயி போதனைகளை நடைமுறைப் படுத்தக் கூடியதான தலைமைத்துவப் பயிற்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

3. சாயி நிறுவனங்களில் சேவை நடவடிக்கைகளில் எல்லா பக்தர்களையும் பங்குபற்ற வைப்பது நிலைய, பிரதேச, தேசிய மட்டத்திலுள்ள தலைவர்களின் பொறுப்பாகும். ஆன்மீக மாற்றத்திற்கான பிரதான பாதையாக அன்பு நிறைந்த, தன்னலமற்ற சேவையையே மீண்டும் மீண்டும் பகவான் பாபா வற்புறுத்தியுள்ளார்.

4. (பிரசாந்தி நிலையத்தால் வெளியிடப்பட்ட பிற்சேர்க்கைக்கமைய நீக்கப்பட்டுள்ளது. — ஆசிரியர்)

5. பூமியின் விலை மதிக்க முடியாத வளங்கள் பொறுப்பற்ற முறையில் வீணாக்கப்பட்டு வரும் கவலை தரும் நிலையை மாற்றியமைக்கக் கூடிய வழி முறைகளை பக்தர்கள் விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும். மனித மேம்பாட்டுக் குணங்கள் கவலைக்கிடமான முறையில் தாழ்ந்து வரும் நிலையை மாற்றுவதற்கு செயல் முறை முக்கியமாக உதவும்.

## ஆறாவது உலக மகாநாடு பகுதி III
## மகா நாட்டின் மற்றைய தீர்மானங்கள்

அறிக்கையின் இப்பகுதியிலுள்ள தீர்மானங்களின் விளக்கங்கள், நிறுவனங்களின் வழிகாட்டல்களுக்காகத் தரப்பட்டுள்ளது.

### ஆன்மீகம்

ஆன்மீகப் பகுதியின் தீர்மானங்கள் பின்வருமாறு:

1. பகவான் பாபாவின் போதனைகளையும், செய்திகளையும் பரப்புவதற்குப் பொதுக் கூட்டங்களை நடத்தும் போது அனைவரையும் அழைக்கவேண்டும். கட்டணங்களோ, அன்பளிப்புக்களோ ஏற்றுக் கொள்ளக் கூடாது. இலவச துண்டுப் பிரசுரங்கள் இதனைத் தெளிவாக விளக்க வேண்டும், இதன்படி:-

அ) சஞ்சிகைகளிலும், தொடர்பு சாதனங்களிலும் விளம்பரப்படுத்தலாம், வாசிகசாலைகள், பல்கலைக்கழக அறிவிப்புப்பலகை என்பவற்றில் 'போஸ்டர்களை' ஒட்டலாம்.

ஆ) பொருத்தமான கையேடுகளை (Brochure) கூட்டத்திற்குச் சமூகமளிப்

பவர்களுக்கு இலவசமாகக் கொடுக்க லாம். இது சாயி நிலையங்களுக்கு வரும் புதிய பக்தர்களுக்கு வழங்கப் படும் கையேடு போலிருக்கலாம். இந் தக் கையேட்டில் உள்ளூர் சாயி நிலை யங்கள் பற்றிய தகவல்களும், சாயி இலக்கியங்களைப் பெறக்கூடிய இடங் கள் பற்றிய விபரங்களும் இடம் பெற் றிருக்க வேண்டும்.

இ) பக்தர்களின் மனப்பாங்கும், நிகழ்ச்சி அமைப்புமே முக்கியமானது. பகவான் பாபாவினாலும், அவரது போதனைகளைக் கற்று விளக்கியதால் ஏற்பட்ட ஞானத்தாலும் ஈர்க்கப்பட்டு அன்பைப் பகிரும் ஆத்மீக சாதனை யாளராக நாம் உள்ளோம். நாங்கள் புதிய பக்தர்களைத் தேடவில்லை. சாயி பக்தர்களின் நடத்தையும், கட் டுப்பாடும், இதயத்தில் அன்பின் வெளிப் பாடும் ஏனையோரை இந்த ஆன்மீகப் பாதையில் ஊக்குவிக்கும்.

2. சாயி பக்தர்களாகிய நாம் எல்லா மதங்களைப் படிப்பதுடன் அவற்றிற்கு மதிப்பளிக்கவும் வேண்டும். சாயி நிலைய நிகழ்ச்சிகளில் மதங்களின் ஒற் றுமைக் கோட்பாடு வெளிப்பட வேண் டும். எந்த ஒரு சமயத்தினதும் போத னைகளும், வழிபாட்டு முறைகளும், கிரி யைகளும், நிகழ்ச்சி நிரலில் விசேட முக்கியத்துவம் பெறக்கூடாது.

எல்லா சாயி நிலையங்களும் பின்வரு வனவற்றை செயற்படுத்துமாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அ) எல்லா சமயங்கள் பற்றியும் சர்வ மத ஒற்றுமையை வலியுறுத்தும் பட் டறைகள் அமைக்கலாம்.

ஆ) நாட்டின் முக்கியமான மதங்க ளின் விழாக்கள் கொண்டாடப்பட வேண்டும். அந்த சமயத்தின் பெரி யார்கள் அந்த விழாக்களின் முக்கியத் துவம் பற்றி விளக்குவதற்கு அழைக் கப்படலாம்.

இ) பஜனைப் பாடல்கள் அந்த நாட் டின் மொழியையும், சமயங்களையும், பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். ஆயினும் எல்லா சமயப் பாடல்களும் உள்ளடக்கப்படலாம்.

3. ஸ்ரீ சத்ய சாயி நிறுவனம் உண்மை யாக ஒரு தெய்வீக சக்தியால் உந்தப் பட்ட ஆத்மீக நிறுவனம் என்பதை வெளிப்படுத்தும் முறையில் அதனு டைய உண்மைத் தத்துவத்தையும், நடைமுறைகளையும் செயற்திறன்களை யும் வெளிப்படுத்தக் கூடிய நூல்கள், ஒலி, ஒளி நாடாக்கள் முதலியவற்றை சத்ய சாயி உலக நிறுவனத்தின் மத் திய காரியாலயம் உருவாக்க வேண்டும்.

4. கல்வி வட்டத்தின் தரத்தை உயர்த்தும் விதத்தில் பின்வரும் சிபார்சுகள் செய் யப்பட்டன.

★ கல்விவட்ட ஆலோசகர் கலந்துரை யாடல் நடத்துவதில் திறமையுடை யவராயும், பாபாவின் போதனை களைக் கடைப்பிடிக்கும் முன் உதாரணராகவும் இருக்க வேண் டும்.

★ கல்வி வட்டம் அறிவூட்டுவதாகவும் கவர்ச்சிகரமாகவும், நாளாந்த வாழ்க்கையுடன் ஒட்டியதாகவும் இருக்க வேண்டும்.

★ கலந்துரையாட இருக்கும் தலைப் புகள் முன்கூட்டியே அங்கத்தவர் களால் குறிப்பிடப்பட்டவையாக இருக்க வேண்டும்.

★ கல்வி வட்டத்தைப் பற்றி முன் கூட்டியே ஆராய்ச்சிகள் செய்யப் பட வேண்டும்.

★ பாவிக்கப்படும் நூல்கள் அதிகார பூர்வமானவை எனக் கருதப்படக் கூடியவையாக இருக்க வேண்டும்.

★ உலகத்தின் முக்கிய சமயங்களின் நூல்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

★ முழுநாட்டிற்கும் பொருந்தக்கூடிய பாடத்திட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

★ சாயி அனுபவத்தைப் பகிரக்கூடிய நல்ல சத்சங்கமாக இச்சந்திப்புக்கள் அமைய வேண்டும்.

★ பங்கு பற்றுவோர், கற்ற பாடங்களை உணர்ந்து அவற்றைச் செயலில் கொண்டுவருவதற்கான வழிகளை ஊக்குவிக்க வேண்டும்.

★ கல்வி வட்டம் நடத்துபவருக்குப் பயிற்சிகள் கொடுக்க வேண்டும்.

★ நிலையங்களில் நடைபெறும் கல்வி வட்டத்திற்குத் தேசிய இணைப்பாளர் பெரும் உதவி புரிய வேண்டும்.

* ஆலோசகர்களாக இருத்தல் வேண்டும்.

* உதாரண நூல்களைக் கல்வி வட்டத்திற்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

* வெற்றியளித்தவற்றையும், வெற்றியளித்த சாதாரண முறைகளையும் தெரியப்படுத்த வேண்டும்.

5. நிலைய நிர்வாகத்தைப் பொறுத்தவரை அன்பும், ஒத்திசைவும் தான் நிலையத்துள்ளும், நிலையங்களுக்கிடையேயும் உந்து சக்தியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பக்தர்களும் உறுப்பினர்களும், உத்தியோகத்தர்களும் தமது, தமது குடும்பத்தினரது, சமூகத்தினது, ஆத்மீக சாதனைகளுக்கு 9 கோட்பாடுகளினதும், 10 கட்டளைகளினதும் உள்ளார்த்தங்களை உணர வேண்டும். இதற்கு கல்வி வட்டங்களும் ஆன்மீக ஒன்று கூடல் (Spiritual Camps) களையும் ஏற்படுத்த வேண்டும். இதே போன்ற கல்வி வட்டங்களை, நிறுவனத்தின் சட்ட திட்டங்களை உத்தியோகத்தர் முழுமையாக விளங்கிக் கொள்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சாயி நிலையங்கள் மேலும் திறமையாக நிர்வகிக்கப்படுவதற்கு பின்வரும் சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன:

அ) சாயி நிறுவனங்கள் எதிர்காலத்திற்கான இலட்சியங்களையும் இலக்குகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

ஆ) நிலையத்தலைவர்கள் நம்பிக்கையையும், மரியாதையையும் இயல்பாகவே பெற்றுக் கொள்ள வேண்டும்; வற்புறுத்தலாலல்ல.

இ) நிறுவனத்தின் எல்லா நிலையில் இருப்போருடன் முக்கியமாக நிலையத்திற்கு வரும் பக்தர்களுடன் நல்ல தொடர்பு இருக்க வேண்டும்.

ஈ) சாயி பக்தர்களுக்கு நிலையங்களில் நல்ல பயிற்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தல் வேண்டும். அதன் மூலம் அவர்கள் தங்கள் பொறுப்புகளை உணர்வதுடன் தலைமைத்துவப் பண்பையும் அபிவிருத்தி செய்ய உதவ வேண்டும்.

உ) சத்ய சாயி பாபா என்ற பெயரையும் அதனுடன் இணைந்த பல்வேறு அமைப்புக்களையும் தவறாக உபயோகிப்பதைத் தடுக்க வேண்டும். சாயி நிறுவனத்தினது சர்வமத சின்னமும், மனித மேம்பாட்டு சின்னமும் இதேபோல் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சர்வமத சின்னத்தைப் பாவிப்பதில் ஏதாவது இடைஞ்சல் ஏற்பட்டால் அந்நாடுகளில்

ஐந்து மேம்பாடுகளைக் கொண்ட சின்னத்தைப் பாவிக்கலாம்.

ஊ) சாயி நிலையங்களுக்குரிய சட்ட திட்டங்களுக்கு எதிராக இயங்கும் நிலையங்களுடன் அன்பாகவும், புரிந்துணர்வுடனும் ஒத்திசைவுடனும் பேசி அவர்களை ஒத்துழைக்கப் பண்ண வேண்டும். ஆயினும் தொடர்ந்து தவறுகள் நடைபெற்றால் ''உலக சாசனத்'' திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேபோல் சாயி என்ற பெயரைப் பயன்படுத்தும் ஒவ்வொரு குழுவையும் சாயி நிறுவனத்துடன் இணைப்பதற்கு சகிப்புத் தன்மையுடனும், புரிந்துணர்வுடனும் அணுக வேண்டும். ஆயினும் ஒத்துழையாமை தொடருமானால் ''உலக சாசனத்'' திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எ) நம்பிக்கைச் சிகிச்சை பற்றிய செயற்பாடும், விளம்பரமும் சாயி நிலையச் செயற்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

6. சாயி நிறுவனத்தின் நிதி சம்பந்தமாக, சாயி நிறுவனங்கள் பொது வேண்டுகோள்களையோ அல்லது அன்பளிப்புகளையோ கோரக்கூடாது. இது சம்பந்தமாகப் பின்வரும் நடைமுறைகளைக் கைக்கொள்ளலாம்:

அ) சாயி நிறுவனங்கள் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்படாத இடங்களில் பண அன்பளிப்புகள் பெற்றுக் கொள்ளக் கூடாது. மண்டபத்தின் பிற்பகுதியிலேயோ அல்லது தனியான அறையொன்றிலேயோ உண்டியற் பெட்டி வைத்து அன்பளிப்புச் செய்வோரின் இரகசியம் பேணப்பட வேண்டும். உண்டியற் பெட்டிகள் சில உத்தியோகத்தர் முன்னிலையில் திறக்கப்பட்டு சரியான கணக்கு வைக்கப்பட வேண்டும்.

ஆ) சட்ட பூர்வமாக நிறுவனங்களைப் பதிவு செய்த நாடுகளில், இந்த நிறுவனங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அன்பளிப்புகளைப் பக்தர்களிடமிருந்தும், தாமாக விரும்புபவர்களிடமிருந்தும் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். அந்த நாட்டின் சட்டத்திற்கு அமைவாகச் சரியான கணக்குகள் பேணப்பட வேண்டும்.

7. புதிய பக்தர்களை வரவேற்பதிலும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் விசேட கவனம் செலுத்த வேண்டும். இதற்காக புதிய பக்தர்களைக் கவனிக்க ஒரு இணைப்பாளரை நியமிக்க வேண்டும். பொருத்தமான சாயி பிரசுரங்களை இலவசமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். பகவான் பாபாவின் போதனைகள் சம்பந்தமாக ஒலி, ஒளி நாடாக்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

புதிய பக்தர்களை வரவேற்கும் முறைகளில், தகவல் நிலையங்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், ஆட்களை அறிமுகம் செய்யும் மாலை நிகழ்ச்சிகள் (Fellowship Nights) ஆகியவைகளும் அடங்கும்.

## கல்வி

இத்தலைப்பின் கீழ் மகாநாட்டின் மற்றைய தீர்மானங்கள் வருமாறு:

1. பெற்றோருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி உற்சாகமூட்டி அவர்களுக்கு முழுமையான ஆர்வம் ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் பிள்ளைகளை மனித மேம்பாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற வைக்கலாம்.

பின்வரும் முறையில் இதனை அடையலாம்;

அ) பெற்றோர் தினம், கல்வி வட்டம், கோடை முகாம்கள் ஆகியன அமைத்து

மனித மேம்பாட்டு நிகழ்ச்சிகள் பற்றியும், பெற்றோரின் பங்கு, அவர்களின் பிள்ளைகள் பெறக்கூடிய நன்மைகள் ஆகியவற்றையும் விளக்கலாம்.

ஆ) பாடத்திட்டத்தை (Lesson Plan) பெற்றோருக்குக் கொடுக்கலாம்.

இ) முன்னாள் சாயி ஆன்மீகக் கல்வி (பால விகாஷ்) மாணவர்களை அவர்களின் அனுபவங்கள், அவர்கள் எவ்வாறு நன்மையடைந்தனர், இத்திட்டம் எவ்வாறு அவர்களின் பாடசாலைக் கல்விக்கும், தொழிலுக்கும் உதவியாக இருந்தது என்பவற்றை பேச செய்ய வேண்டும். இது பெற்றோரையும் பிள்ளைகளையும் பங்குபற்றத் தூண்டும்.

2. காலத்திற்குக் காலம் மீள்பயிற்சிகளை எல்லா ஆசிரியர்களுக்கும் ஏற்பாடு செய்வதன் மூலம், நவீன கற்பித்தல் முறைகளைத் தெரிவித்து அவர்களின் தரத்தை உயர்த்தலாம். அத்துடன் தாம் கற்பிக்கும் பாடங்களின் படி நடந்து உதாரணமாகத் திகழ வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தலாம்.

3. புதிய ஆசிரியர்கள் வகுப்புகளை எடுக்க முன்பு பார்வையாளராயும், உதவியாளராயும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சத்ய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி வகுப்பில் கடமை புரிய வேண்டும். எல்லா ஆசிரியர்களுக்கும் பயிற்சி கொடுக்க முன்பு, குறைந்தது ''ஒரு வருடத்திற்காவது கற்பிப்பேன்'' என்ற உறுதி மொழியைப் பெற வேண்டும்.

4. சத்ய சாயி மனித மேம்பாட்டுக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் அடங்கியுள்ளவற்றை எல்லா நிலைய உறுப்பினர்களுக்கும் கல்வி வட்டம் அல்லது ஆன்மீக முகாம்களுக்கூடாக விளக்க வேண்டும்.

5. சத்ய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி நிகழ்ச்சித் திட்டம், அரசாங்க கல்வி நிறுவனங்களில் அறிமுகமாவதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

அ) அந்தந்த நாட்டுத் தேசிய அமைப்பாளர்கள், ஆவணப்படுத்தப்பட்ட சிபார்சுகளை அரசாங்க, தனியார் பாடசாலைகளுக்காகத் தயாரிப்பதற்கு, மத்திய இணைப்பாளர்கள் உதவி செய்ய வேண்டும்.

ஆ) உலக நாடுகளில் சத்ய சாயி மனித மேம்பாட்டுக்கல்வி நிகழ்ச்சித் திட்டம் எந்த வகையில் பொருத்தமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதென் பதை, கல்வித்துறை அதிகாரிகளுக்கும் முகாமையாளர்களுக்கும் அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டும்,

இ) சத்ய சாயி மனித மேம்பாட்டுக் கல்விப் பயிற்சி முகாங்கள் அமைக்கும் போதெல்லாம் ''சத்ய சாயி'' என்ற பெயர் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலவளமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

6. சமுகத்தில் மனித மேம்பாட்டுக் கல்வியைப் பொறுத்தவரை (வாலிபர், இளம் வயதினர்) பல்வேறு நாடுகளில் அனுபவம் பெற்று கையாளப்பட்ட பின்வரும் உத்திகளைச் சிபார்சு செய்கிறோம்.

அ) விவாதங்கள், நாடக விழாக்கள், பேச்சுப் போட்டிகள், பாடல் அல்லது இசை நிகழ்ச்சிகள், இளைஞர் கருத்தரங்குகள்.

ஆ) இளம் பெற்றோருக்கும், திருமணம் செய்து கொள்ள இருக்கும் தம்பதிகளுக்கும் நல்ல பெற்றோராக இருப்பது பற்றியும், குடும்ப மேம்பாடுகள் பற்றியும் கருத்தரங்குகள்,

இ) ஐக்கியம், தேசிய அபிவிருத்தி, மதங்களிடையே புரிந்துணர்வு ஆகியன பற்றி பொது இடங்களில் கருத்துப் பரிமாற்றங்கள்.

ஈ) பத்திரிகைகளுக்கு எழுதுதல், சஞ்சிகைகளில் கட்டுரை எழுதுதல், வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்.

உ) மன அழுத்தங்களைக் கையாளல் (Stress Management) தியானம், சத்துணவு, குடும்ப ஆலோசனை, கேட்கும் ஆற்றல், வாழ்க்கைத்திறன் ஆகியவற்றில் பயிற்சி.

ஊ) ஒளி நாடாக்கள் வழங்கல், கல்வி வட்டம், சாயி தொலைபேசிச் சேவை.

எ) கல்வித்துறையில் ஈடுபட்டவர்களுக்கிடையில் கூட்டுக் கருத்துப் பரிமாற்றம். (Pannel Discussion)

ஏ) மேம்பாடுகள் சம்பந்தமான விளையாட்டுகளும், காட்சிகளும்.

ஐ) புகைத்தல், மது, போதைவஸ்துப் பாவனைக்கு எதிரான பிரசார நிகழ்ச்சிகள்,

ஒ) அயலவர் சினேகபூர்வமாகக் கூடிச் சம்பாஷித்தல்.

7. வாலிபர்/இளம் வயதினர் திட்டத்தைப் பொறுத்தவரை இளைஞர் ஆலோசகர்கள் தேசிய/பிரதேச மட்டத்தில் நியமிக்கப்பட வேண்டும். இளைஞர் இணைப்பாளர்களும் நியமிக்கப்பட வேண்டும். இளம்வயதினர் பகுதி அல்லது வாலிபர் பகுதி தங்கள் தலைமைத்துவத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய நிகழ்ச்சிகளைத் தயாரிக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும். இவற்றை அந்தந்த சாயி நிலையத் தலைவர்களின் ஆலோசனைகளுடன் தயாரிக்க வேண்டும்.

8. இளம் வயதினருக்கான திட்டங்களில் பின்வருவனவும் அடங்க வேண்டும்:

★ ஒழுக்க விருத்தி.

★ தலைமைத்துவப் பயிற்சி.

★ தன்னம்பிக்கையை வளர்க்கும் வழிவகைகள்.

★ மேடைப்பேச்சு, தொடர்புகொள்ளும் ஆற்றல்.

★ தொழில் வழிகாட்டல்.

★ சாயி ஆன்மீகத் திட்டங்கள்.

★ நிறுவனத்தின் கல்வி, சேவை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றல்.

★ விளையாட்டு.

★ நாடக, சங்கீத நிகழ்ச்சிகள்.

## சேவை

இந்தத் தலைப்பின் கீழ் மகாநாட்டில் செய்யப்பட்டுள்ள தீர்மானங்கள் வருமாறு:

1. சேவை நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். இந்த இலக்கை அடைவதற்கு சிபார்சு செய்யப்பட்ட முறைகளுள் பின்வருவனவும் அடங்கும்:

அ) கல்வி வட்டம், பட்டறைகள் அமைப்பதன் மூலம் நிலைய உறுப்பினர்கள் சேவை என்ற சாதனையின் ஆன்மீக முக்கியத்துவம் பற்றி கூடுதலாக விளங்கிக் கொண்டு, சேவைத் திட்டங்களை ஆற்றுவதற்குத் தேவையான திறமைகளை விருத்தி செய்தல்.

ஆ) சேவையில் ஈடுபட்டவர்களின் மகாநாடுகளை அமைத்து அவர்களின் அறிக்கைகளை விவாதிப்பதின் மூலம் எதிர்கால சேவைகளைத் திட்டமிடலாம்.

2. நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளுக்கு உதவி செய்ய சேவைப் பிரிவு தேவையாகும்.

3. சேவைத்திட்டங்களின் தரத்தையும், நிபுணத்துவத்தையும் (professionalism) மேம்படுத்துவதற்காக சேவை நடவடிக்கைகளில் பின்வரும் சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன;

அ) குறிப்பிட்ட இடத்திற்குத் தேவைப்படும் சேவைகளை அடையாளம் காணல்.

ஆ) திட்டங்களைச் செயற்படுத்தத் தேவையான பயிற்சிகளை வழங்கல்.

இ) திட்டங்களை அன்புடனும், கட்டுப்பாட்டுடனும் அமைத்துச் செயற்படுத்தல்.

ஈ) சுவாமியின் சேவை பற்றிய போதனைகளை ஒவ்வொரு பணியாளரும் படிப்பதை நிச்சயப்படுத்தல்.

4. (பிரசாந்தி நிலையத்தால் வெளியிடப்பட்ட திருத்தத்திற்கமைய நீக்கப்பட்டுள்ளது. — ஆசிரியர்)

5. ஒரே புவியியல் எல்லைக்குட்பட்ட நிலையங்கள் இணைந்து சேவைத் திட்டங்களைச் செய்ய ஊக்குவித்தல்.

6. நிலையத்தின் எல்லா உறுப்பினர்களும் மனப்பூர்வமாகச் சேவையில் ஈடுபட எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்.

7. முக்கிய மதங்களின் விழாக்காலங்களில் சேவை நிகழ்ச்சிகளைத் தயாரித்து அந்த சேவைகளைக் குறிப்பிட்ட விழாக்களுக்கு அர்ப்பணித்தல்.

8. தன்னலமற்ற அன்பை விருத்தி செய்வதற்காகவே சேவைத்திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். கடவுளின் படைப்புக்கள் அனைத்திற்கும் இவை விஸ்தரிக்கப்பட வேண்டும்.

9. சமூகம் ஈடுபடக்கூடிய சேவைத்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். முக்கியமான சேவைகளைத் தெரிவு செய்வதன் மூலம் பொது மக்கள் தாமாகவே முன்வந்து ஆதரிப்பதுடன் பங்குபற்றவும் செய்வர்.

மற்றைய நாடுகளில் பயன் தரக்கூடியதாகச் செயற்படுத்தப்பட்ட முறைகளில் இன்னொன்று; சேவைகள் பற்றியும், மேம்பாடுகள் பற்றியும் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்தல். உதாரணமாக, சமூக சேவை செய்யும் மனப்பாங்கை விருத்தி செய்வதில் சமயத்தின் பங்கு என்ற பொருளில் கருத்தரங்கு அமைத்து, அதனைத் தொடர்ந்து சேவைத்திட்டங்களைத் தயாரித்து, அதில் சேவைக்குழுக்களும், சமயக் குழுக்களும் இணைந்து செயற்படல்.

10. நிலையத்தின் வளங்களுக்கு உட்பட்டதாகவே எல்லாச் சேவைத் திட்டங்களையும் தயாரிக்க வேண்டும். இதில் மக்கள், நேரம், பணம், திறமை ஆகியன அடங்கும். இருக்கும் வளங்களுக்கு மேலாகவும், மரியாதையான முறையில் நிறைவேற்ற முடியாததுமான திட்டங்களை ஒருபோதும் ஆரம்பிக்கக் கூடாது.

# ஆறாவது உலக மகாநாட்டின் தீர்மானங்கள், சிபார்சுகளுக்கான பிற்சேர்க்கை

1995ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி பிற்பகல் 3·00 மணிக்கு இந்தத் தீர்மானங்களும் சிபார்சுகளும் மலர்ப் பாதங்களில் வைக்கப்பட்டது. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்கள் மேற்படி தீர்மானங்களின்படி இளைஞர் பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கும், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகள் கொடுப்பதற்கும் முக்கியத்துவம் கொடுத்ததுடன், பின்வரும் வழிகாட்டல்களையும் வழங்கினார். இவைகளும் ஆறாவது உலக மகாநாட்டின் தீர்மானங்கள் சிபார்சுகளின் பகுதியாக அமையும்.

1. ஐந்து மதங்களின் சின்னங்களைக் கொண்ட ஸ்ரீ சத்ய சாயி நிறுவனத்தின் தற்போதைய இலட்சணை மாற்றியமைக்கப்படும். ஐந்து மனித மேம்பாட்டுக் குணங்களைக் கொண்ட புதிய இலட்சணை மத்திய அலுவலகத்தினால் காலக்கிரமத்தில் தயாரிக்கப்பட்டு 14 - 01 - 1996 க்குப்பின் அனுப்பி வைக்கப்படும்.
2. இந்தியாவிற்கு வெளியே, அங்கு அமைந்துள்ள சூழ்நிலைகள் காரணமாக, பஜனை நிகழ்ச்சிகளிலும், பாலவிகாஸ், மனித மேம்பாட்டுக் கல்வி வகுப்புகளிலும் சுலோகங்களை உபயோகிப்பது கட்டாயமானதல்ல என்று கருதப்படுகிறது.
3. ஸ்ரீ சத்யசாயி நிறுவனம், தனது செயற்பாடுகளைக் கொண்டு நடத்துவதற்கு வேறு எந்த சமய, ஆன்மீக நிறுவனங்களின் உதவியையும் பெறக் கூடாது. இதனைக் கருத்தில் கொண்டு தீர்மானங்கள் சிபார்சுகளினது சேவைப் பகுதியின் 4 காவது தீர்மானம் நீக்கப்பட்டுள்ளது.
4. சாசனத்தின்படி ஆயுட்கால உத்தியோகத்தர் என எவரையும் நியமிக்க முடியாது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. பதவிக் காலத்திற்கு ஏற்ப உத்தியோகத்தர்களின் மீள் தெரிவு அல்லது மீள் நியமனம் வழமைபோல் உரிய காலத்தில் நடைபெற வேண்டும். மத்திய இணைப்பாளர்களின் பதவிக் காலம் ஐந்து வருடங்களாகும். தெரிவு அல்லது மீள் நியமனம் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு உள்ளது போல் நடைபெறும்.

## பிரேமசாயி பற்றி பகவான்

"சுவாமி, பிரேமசாயியாக அவதாரம் செய்யும்போது அந்த அவதாரத்திற்கும் சேவை செய்யும் வாய்ப்பை, பகவான் தனக்கு அருள வேண்டும் என தமிழ்நாடு சத்யசாயி நிறுவனங்களின் தலைவர் ஸ்ரீ T. G கிருஷ்ணமூர்த்தி வேண்டினார். ஐயா! ஏற்கனவே உங்களிடம் இருப்பதைக் கவனமாகப் பேணுங்கள். எதிர்காலத்தின் கருப்பையில் இருப்பதைப் பற்றி ஏன் இப்பொழுதே பேரவாக் கொள்கிறீர்கள். நிகழ்காலமே முக்கியமானது. கடந்தகாலம் முடிந்து விட்டது. எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எதிர்காலத்தையே தீர்மானிக்கும் நிகழ்காலத்தை மட்டும் கவனத்தில் எடுங்கள். உங்கள் கடமைகளை இப்பொழுதே செய்யுங்கள். கடமைதான் கடவுள்"

( 18 - 11 - 1995 அருளுரையில் )

## உங்களோடு நாம்.........

இந்த இதழ் சாயி மார்க்கம் வித்தியாசமாக வெளிவருகிறது. பகவான் பாபாவின் 70 வது பிறந்த தின விழா, ஆறாவது உலக மகா நாடு ஆகியன சம்பந்தமான சிறப்பிதழாக வருகிறது.

பாபா காட்டும் ஆன்மீகப் பாதையில் பயணம் செய்யும் எங்களுக்கு ''கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் அவசியமானவை. தீர்மானங்களை நிறைவேற்றிய அந்தக் கணமே அவற்றை அனுஷ்டிக்கத் தொடங்க வேண்டும். இதுதான் ஆன்மீக ஒழுங்குமுறையாகும்.'' என பாபா கூறுகிறார்,

ஆறாவது உலக மகாநாட்டின் போது பகவான் பாபா பல அன்புக் கட்டளைகளையும், வழிகாட்டல்களையும் அருளியிருக்கிறார். 137 நாடுகளைச் சேர்ந்த சுமார் 8,000 பிரதிநிதிகள் குழுமிய உலக மகாநாட்டின் தீர்மானங்களும் சிபார்சுகளும் பகவானின் பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டு அவரது அங்கிகாரமும், ஆசீர்வாதமும் பெறப்பட்டது. பகவான் மேலதிக வழிகாட்டல்களைப் பிற்சேர்க்கையாகவும் அருளியுள்ளார்.

இவை நூல் வடிவில் ஒவ்வொரு சாயி நிலையத்திற்கும் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டுள்ளது. இவைதான் அடுத்த ஐந்து வருடங்களுக்கு எமக்கும் எமது நிறுவனத்திற்குமான செயற்பாடுகளைத் தீர்மானிக்கும், வழிகாட்டும், ஆன்மீக ரீதியான நிலை மாற்றத்திற்கான 'வேத நூலாக' இருக்கப் போகிறது.

இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த 'சாயி மார்க்கம்' இது ஒவ்வொரு சாயி பக்தனுக்கும் தாய்மொழியில் கிடைக்க வேண்டும் எனத் தீர்மானித்தது. எனவே மொழி பெயர்த்து இவ்விதழில் வெளியிடுகிறோம். இவ்விதழை ஊன்றிப் படித்தபின், கவனமாகப் பேணி வைப்பதுடன், மீண்டும் மீண்டும் படித்து எமது நாளாந்த வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலம் பாபா காட்டும் ஆன்மீகப் பாதையில் நடந்து, இலக்கை அடையலாம்.

''தீர்மானங்களின் முதற் பகுதியான 'பகவானின் தெய்விக வழிகாட்டல்களும், கட்டளைகளும்' என்பதை ஒவ்வொரு சத்ய சாயி நிலையங்களிலும் பஜனை நிலையங்களிலும் அடுத்த மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து வாசிக்க வேண்டும்'' என உலக கவுன்ஸில் தலைவர் ஸ்ரீ இந்துலால் ஷா அறிவுறுத்தியிருக்கிறார். இது அதன் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகிறது.

21 ம் நூற்றாண்டில் ஏற்பட இருக்கும் ஆத்மீகத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய அமைப்பாக சாயி நிலையங்கள் விளங்க வேண்டும். இந்த இலட்சியத்தை எய்துவதற்கு இந்தத் தீர்மானங்களும், சிபார்சுகளும் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பத்திரிகைத்தாள் தட்டுப்பாடு, கடும் விலையேற்றம், சூழ்நிலை காரணமாக வழமையான பகுதிகளை இடம் பெறச் செய்ய முடியவில்லை.

ஜெய் சாயிராம் 'ஆசிரியர்குழு'

# புட்டபர்த்தியில் பெருவிழா

## 1995 நவம்பர் 23, பகவானின் எழுபதாவது பிறந்தநாள்.

சாயி அன்பர்கள் அனைவருக்குமே இனிமையான நாள்.
உலகெங்குமே சத்யசாயி நிலையங்களில் விழாக்கள்,
புட்டபர்த்தியிலோ சொல்ல முடியாது!

புதிய புதிய கட்டடங்கள், புது மெருகு, அலங்காரங்கள் என விழாக்கோலம். மந்திரில், பக்தர்கள் தரிசனத்திற்காக அமரும் இடம் விஸ்தரிக்கப்பட்டு 'சாயி குல்வந் மண்டபம்' எனபகவானால் பெயரிடப்பட்டுள்ளது. பூரணச்சந்திரா மண்டபத்திற்கு தெற்காக அமைந்திருந்த கடைகள் அகற்றப்பட்டு, வட்ட மாடிக்கட்டிடத் தொடருக்குப் பின்புறமாக, இரண்டு மாடி வர்த்தக நிலையம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. தற்காலிக கொட்டகைகள் ஏராளம்.

தமிழ்நாடு சாயி பக்தர்களால் அளிக்கப்பட்ட வெள்ளியிலான அனுமார்சிலை, பிரசாந்தி மந்திரில் பகவானால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. விக்னேஸ்வரர் சிலைக்கு எதிரே பகவானின் ஆசனத்திற்கு இரு மருங்கிலும் இரு புதிய முழு அளவிலான பகவானின் படங்கள்.

23ம் திகதி அதிகாலை முதலே மக்கள் கூட்டம் கூட்டமாக குன்றுகள் சூழ்ந்த விசாலமான 'ஹில் வியூ அரங்கில்' கூடத் தொடங்கினர். 137 நாடுகளைச் சேர்ந்த பல லட்சம் மக்கள்; சிக்கன மதிப்பீடுகள் 10 லட்சம் எனவும், தாராள மதிப்பீடுகள் 32 லட்சம் எனவும் கணக்கிடுகின்றன. பல மொழி பேசும், பல நிற மக்கள் ஒரு தாய்க் குழந்தைகள் எனக் கூடியிருக்கின்றனர் அவ்வளவு தொகையில் மக்கள் கூடிய போதும், அங்கு அமைதி நிலவியமை சாயி அன்பர்களின் ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் சான்றாயிருந்தது.

சரியாகக் காலை 7.30 மணி: சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட, பிரகாசமாக ஒளிர்கின்ற வெள்ளி ரதத்தில் பகவான் பவனி வந்தார். மலர்ந்த முகத்துடன் அபயக் கரம் காட்டி வந்த பகவான் வெள்ளையுடை தரித்திருந்தார். கிராமிய நடனக் குழுவின் நீண்ட அணி ஊர்வலத்தின் முற்பகுதியில் வந்தது. மஞ்சள் வேட்டி அணிந்த 700 பக்தர்கள் காவடியுடன் வந்தனர். அதற்குப் பின் 137 நாடுகளின் ஒவ்வொரு பிரதிநிதியும் தத்தமது நாட்டுத் தேசியக் கொடியுடன் வரிசையாக ஊர்வல அணியில் வந்தனர். எல்லாவற்றிற்கும் முன்பாக பட்டாடைகளால் அலங்கரிக்கப்பட்ட பகவானுக்குப் பிரியமான 'சாயி கீதா' என்ற யானை ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிச் சென்றது. அதன் பின்னே வேதம் ஓதும் மாணவர்கள், பொய்க்கால் குதிரை அணி, இன்னும் எத்தனையோ அணிகள். சிறு விமானமொன்று அகன்ற அரங்கைச் சுற்றிப் பறந்து மலர் மழை பொழிந்தது.

காவடி அணிக்குத் தலைமை தாங்கிச் சென்ற தமிழ்நாடு சத்ய சாயி நிறுவனங்களின் தலைவர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் கையில் ஒரு தங்கத்திலான வேல். அணியில் வந்த அவர் மேடையை அண்மித்ததும், அணியிலிருந்து விலகி, மேடையில் ஏறி பகவானிடம் அந்தத் தங்க வேலைக் கையளித்தார். மகிழ்ச்சியோடு அதைப் பெற்றுக் கொண்ட பகவான், அதை வலது கையில் ஏந்தி, சற்றுச் சரிவாக ஊன்றி, முருகப் பெருமான் போல் காட்சியளித்தார். கண் எதிரே, நிஜமாகவே பகவான் முருகப் பெருமான் போல் காட்சியளித்ததைக் கண்ட பக்தர்கள் மெய் மறந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். சரித்திர முக்கியத்

துவம் வாய்ந்த விழாவின் கண் கொள் ளாக் காட்சியாக இது அமைந்தது.

பல வெளிநாட்டு சாயி அன்பர்களின் உருக்கமான வேண்டுகோளை தவிர்க்க முடி யாத பகவான், அவர்களது தங்கக் காசு மாலைகளைத் தனது பாதங்களில் சமர்ப் பிக்க அனுமதித்தார். ஆயினும் ''பகவானுக்கு ஆபரணம் என்பது ஏது? அன்புதான் ஆபரணம்! இனியும் தங்க ஆபரணங்களைக் கொண்டுவர முயற்சிக்காதீர்கள்'' என்றார்.

அர்ப்பணிக்கப்பட்ட எந்த ஆபரண முமே பிரசாந்தி நிலையத்திற்கு எடுத்துச் செல்லக்கூடாது என்றும் அவை உடனடி யாகவே ஏலத்தில் விடப்பட்டு, கிடைக்கும் நிதியை குடிநீர் திட்டத்திற்கான நம்பிக்கை நிதியில் சேர்க்கப்பட வேண்டும் எனவும் கூறினார். ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சாயி அன்பர் ஒருவர் உடனடியாகவே அத் தனை ஆபரணங்களையும் சந்தைப் பெறு மதியின் இரண்டு மடங்கு பணம் கொடுத்து வாங்கினார். பணம் நம்பிக்கை நிதியில் சேர்க்கப்பட்டது. குடிநீர்த் திட்டத்திற்கு 25 லட்சம் ரூபாவிற்கு மேல் அன்பளிப்பு செய்தவர்களின் பெயர் விழாவில் வாசிக் கப்பட்டது. குடிநீர்த் திட்டத்திற்கு 250 கோடி ரூபாவிற்கு மேல் நிதி சேர்ந்தது.

பகவானின் அருளுரையைத்தொடர்ந்து அங்கு கூடியிருந்த அனைத்து மக்களுக்கும் 'லட்டு' பிரசாதமாக வழங்கப்பட்டது.

மாலையில் பிரபல இசைக் கலைஞர் களின் செவிக்கினிய இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. பிரபல கிரிக்கட் வீரர்க ளான சுனில் கவாஸ்கரும், அல்வின் காலிச் சரனும் கலைஞர்களை அறிமுகப் படுத்தி வைத்தனர்.

இறுதியில் ஊஞ்சலிலிருந்தபடி பகவான் கூடியிருந்த பெருந்தொகையான பக்தர்க ளுக்குத் தரிசனம் கொடுத்தார்.

# புனித நகர் புட்டபர்த்தியில்

பகவானின் 70 தாவது பிறந்த தினத்தையொட்டி புட்டபர்த்தியில் பல்வேறு சேவைத்திட்டங்கள், வைபவங்கள், விழாக்கள் நடைபெற்றன. அவற்றிலிருந்து சில காட்சிகள்.

## ஸ்ரீ சத்ய சாயி குடிநீர் வழங்கும் திட்டம்

அனந்தப்பூர் மாவட்டம் மிக வரட்சி யானது. மக்கள் வாழ்வை மிகவும்பாதித் தது. அத்துடன் அங்குள்ள நீரில் புளோ ரின் என்ற மூலகம் மிக அதிகம். இது அந்த மக்களின் பற்களையும் எலும்புகளையும் பாதித்து நோய்வாய்ப்படுத்தியது.

இதற்குத் தீர்வு காண பகவான் திரு வுள்ளம் கொண்டதால் உருவானதே ஸ்ரீ சத்ய சாயி குடிநீர் வழங்கும் திட்டம். 700 கிராமங்களுக்கு நீர் வழங்கும் 250 கோடி ரூபா செலவுள்ள இத்திட்டம் 1994 நவம் பரில் பகவானால் அறிவிக்கப்பட்டு, 1995 மார்ச் மாதத்தில் வேலை தொடங்கி, நவம் பர் 1995ல் நிறைவு செய்யப்பட்டது. 2500 கி. மி. மேல் நீளமுடைய, அகண்ட குழாய்களைப் பதித்து, 1 லட்சம் முதல் $1\frac{1}{2}$ லட்சம் லீட்டர் நீர் கொள்ளக் கூடிய பல பாரிய நீர்த்தாங்கிகளை அமைத்து, 125க்கு மேற்பட்ட நிலத்தளவு நீர்ச் சேமிப்பு தேக்கங்களைக் கட்டி பல ஆழ் குழாய் கிணறுகளைத் தோண்டி முடிக்கப் பட்ட இந்தப் பாரிய நீர்த்திட்டம் இந்த ளவு குறுகிய காலத்தில் ஓர் ஆன்மீக நிறு வனத்தால் நிறைவேற்றப் பட்டமைக்கு

பகவானின் தெய்வீக அருள் மட்டுமே காரணமாயிக்க முடியும்.

நவம்பர் 18ம் திகதி பிரதமர் நரசிம்மராவ் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். பிரசாந்தி நிலையத்திலுள்ள 'பூரண சந்திரா' மண்டபத்தில் உள்ள ஒரு பொத்தானை அவர் அமுக்கியதும் அனந்தப் பூர் மாவட்டம் எங்கும் இந்தநீர்த் திட்டம் செயற்படத் தொடங்கியது. நீர் கிடைத் தமை பற்றி அனந்தப்பூர் வாசிகள் தொலைபேசி மூலம் தெரிவித்த மகிழ்ச்சிச் செய்தி உடனடியாக மண்டபத்தில் கூடி யிருந்த அனைவரும் கேட்கும்படி ஒலிபரப் பப்பட்டது.

## மகளிர் தினம்

நவம்பர் 19ம் திகதி காலை பிரசாந்தி நிலையத்தில் ஓங்காரம், சுப்ரபாதம், வேத பாராயணம் ஆகியவற்றுடன் ஆரம் பித்த மகளிர் தின கொண்டாட்டங்கள் முழுமையாக பெண்களின் பங்கேற்றலில் நடைபெற்றது. 70 பசுக்கள் கன்றுகளுடன் கோதானமாக வேத பண்டிதர்களுக்கு வழங்கப்பட்டது. மாலையில், சாயி பணி யில் பெண்களின் பங்கு பற்றிய, உரைகள் ஆற்றப்பட்டதைத் தொடர்ந்து பகவான் அருளுரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து பழம் பெரும் நடிகை அஞ்சலி தேவி, பின்னணிப் பாடகி P. சுசீலா ஆகியோரால் ஒழுங்கு செய்யப்பட்ட, முழு மையாகப் பெண்கள் மட்டுமே பங்குபற்றிய இனிமையான இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. வருடா வருடம் நவம்பர் 19ம் திகதி மகளிர் தினமாக சத்யசாயி நிலை யங்களால் கொண்டாடப்பட இருக்கிறது.

## பிறந்த நாளில் புனிதநீர்களின் சங்கமம்

உலக ஒருமைப்பாடு என்ற கருத்தை வலியுறுத்து முகமாக சத்யசாயி நிலையங் கள் இயங்கும் 137 நாடுகளிலிருந்தும், அந் நாடுகளின் புனிதநீரில், ஒவ்வொரு லீட்டர் புட்டபர்த்திக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்தந்த நாட்டுக் கலாச்சாரத்தைப் பிரதி பலிக்கும் வண்ணம் அமைக்கப்பட்ட விசேட பாத்திரங்களில் எடுத்துச் செல்லப்பட்ட நீர், பகவானின் பிறந்த தினத்தன்று 'ஹில் வியூ அரங்கில்' வைக்கப்பட்டிருந்த பெரிய பாத்திரத்தில் ஒன்று கலக்கப்பட்டது. பக வான் அந்த பாத்திரத்தினுள் தனது புனித கரங்களை வைத்து நீரைக் கலக்கி ஆசீர் வதித்தார். ஜப்பான் நாட்டிலிருந்து விசே டமாகக் கொண்டு வந்து நாட்டப்பட்ட இரு மரக் கன்றுகளுக்கு அந்த நீர் ஊற் றப்பட்டதுடன், ஒவ்வொரு நாட்டின் பிரதி நிதிக்கும் பிரசாதமாகவும் வழங்கப்பட்டது.

இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப் பட்ட புனிதநீர், நல்லூர் கந்தசுவாமிக் கோயில், திருக்கோணேஸ்வரர் ஆலயம், மண்டூர் முருகன் கோயில், கதிர்காம ஆல யம், மகாவலி கங்கை ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட புனிதநீர்களின் கலப்பு என் பது குறிப்பிடத்தக்கது. இலங்கைச் சின் னம் பொறிக்கப்பட்ட தங்கமுலாம் பூசப் பட்ட கணகவர் பாத்திரத்தில் இலங்கை யின் புனிதநீர் எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கண்காட்சி

அதிவிசேட வைத்தியசாலைப் பணிப் பாளர் டாக்டர் சாரியா, ஏனைய பணி யாளர்கள், மாணவர்கள் இரண்டு வாரங்க ளாக இரவுபகலாகச் செயற்பட்டு அரிய தொரு கண்காட்சியை உருவாக்கியிருந்த னர். பகவானின் வாழ்க்கையையும் பணி களையும் பற்றிய அரிய புகைப்படங்களும் மனதைக் கவரும் வாக்கியங்களும் நிறைந் திருந்தன. நீரிழிவு நோய், ஏனைய தடுக் கக் கூடிய நோய்கள் பற்றி காட்சிப் பொருட்கள் கண்ணையும் கருத்தையும் கவ ரும் விதத்தில் அமைந்திருந்தன.

## நவீன ஸ்கானர் கருவி

Somotom Plus 4A என்ற அதிநவீன ஸ்கானர் கருவி சத்யசாயி அதிவிசேட

வைத்தியசாலையில் பகவான் பாபாவால் நவம்பர் 21ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இது உடலின் 360 பாகையையும் 0.75 செக்கண்டில் படம் பிடிக்க வல்லது. கண் சிகிச்சைப் பிரிவில் விழித்திரைச் சிகிச்சை பற்றிய நவீன அலகும், மருந்து ஆராய்ச்சிக்குரிய பல புதிய நவீன வசதிகளும் பகவானால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வைத்தியசாலைக்கு தென்கொரிய நாட்டு சாயி பக்தர்களால் 1000 அழகிய படுக்கை விரிப்புக்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

## சங்கீத நாட்டியக் கலைவிழா

நவம்பர் 14 - 17 வரையான காலத்தில் ஒரு சங்கீத நாட்டியக் கலை விழா நடைபெற்றது. 'ஒற்றுமையின் உள்ளுரு' என்ற தலைப்பிலான இந்நிகழ்ச்சி 'பாரதத்தில் கலைகள் மூலம் ஒற்றுமையை வளர்க்கும் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 'பூரணச்சந்திரா' அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை பகவான் அங்குராப்பணம் செய்து வைத்தார்.

இந் நிகழ்ச்சியைக் கண்டு களிக்க இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் குழுமியதால் மண்டபம் கொள்ளவில்லை. சாயி குல்வந் மண்டபத்திலும், வெளி இடங்களிலும் பெருந்தொகையான தொலைக்காட்சிப் பெட்டிகளும் ஒலிபரப்பிகளும் அமைக்கப்பட்டு மக்கள் கண்டு களிக்க உதவி செய்யப்பட்டது. அகில இந்திய ரீதியில் துறைசார்ந்த கலைஞர்கள் மிகுந்த ஆர்வத்தோடும் பக்தியோடும் கலந்து கொண்டனர். பகவானின் பிரசன்னத்தால் மகிழ்ச்சியும், உற்சாகமும் பெற்ற கலைஞர்கள் தமது முழுத்திறமையையும் காட்டி பகவானின் அன்பையும், ஆசீர்வாதத்தையும் பெற்றனர். இரு இளங் கலைஞர்களுக்கு பகவான் தங்கச்சங்கிலியும் மோதிரமும் சிருஷ்டித்துக் கொடுத்தார். குன்னக்குடி வைத்தியநாதன் திருமதி சுப்புலஷ்மி போன்ற தமிழ்நாட்டுக் கலைஞர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கொடுத்துச் சிவந்த கரங்கள்

பகவான் எதையும் எவரிடமிருந்தும் பெற்றுக் கொள்வதில்லை; பக்தர்களின் கடிதங்களைத் தவிர. ஆனால் பக்தர்களுக்கும், வறியவர்களுக்கும் தேவையுள்ளோருக்கும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார். 70 பிறந்ததினம் தொடர்பான சில அன்பளிப்புகள் வருமாறு:

★ 128 தம்பதிகளுக்கு இலவச திருமணமும், அவர்களுக்கான ஆடைகள் பாத்திரங்கள் அன்பளிப்பும்.

★ வேலையற்ற பெண்களுக்கு தையல் யந்திரங்கள்.

★ வலது குறைந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் முச்சக்கர வண்டிகள்.

★ அங்கவீனர்களுக்கு, பிரசாந்தி நிலையத்தில் வைத்தே செயற்கை உறுப்புக்களை அவரவர் அளவுகளுக்கேற்ப அமைத்து வழங்கல்.

★ மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், வைத்தியர்கள் போன்ற பல்வேறு தரத்தினருக்கு புத்தாடை வழங்கல்.

★ ஆயிரணக்கணக்கான வெளிநாட்டுப் பக்தைகளுக்கு பட்டுச் சேலைகளை அன்பளிப்பாகக் கொடுத்து அணியத் தூண்டல்.

★ குடிநீர்த்திட்ட அங்குரார்ப்பண வைபவம் நினைவாக 15,000 பேருக்கு அன்னதானமும், வஸ்திரதானமும்.

# பிரசாந்தி நிலையத்திலும், இலங்கையிலும் அனுஷ்டிக்கப்படும் விசேட தினங்கள் 1996

| | | | | |
|---|---|---|---|---|
| | ஜனவரி | 15 | திங்கள் | தைப்பொங்கல் |
| * | பெப்ருவரி | 17 | சனி | மகாசிவராத்திரி |
| * | மார்ச் | 20 | புதன் | யுகாதி (தெலுங்கு வருடப்பிறப்பு) |
| * | மார்ச் | 28 | வியாழன் | இராம நவமி |
| | ஏப்ரல் | 13 | சனி | தமிழ் சிங்கள புதுவருடம் |
| | மே | 3 | வெள்ளி | வெசாக் பூரணை தினம் |
| * | மே | 6 | திங்கள் | ஈஸ்வராம்பா தினம் |
| ** | ஜூலை | 21 | ஞாயிறு | உலக அங்கவீனர் தினம் |
| | ஜூலை | 29 | திங்கள் | நபிகள் நாயகம் பிறந்த தினம் |
| * | ஜூலை | 30 | செவ்வாய் | குருபூர்ணிமா |
| * | செப்ரம்பர் | 5 | வியாழன் | கிருஷ்ண ஜெயந்தி |
| | செப்ரம்பர் | 10 | செவ்வாய் | பாலவிகாஸ் தினம் |
| * | செப்ரம்பர் | 16 | திங்கள் | விநாயக சதுர்த்தி |
| ** | செப்ரம்பர் | 22 | ஞாயிறு | இரத்ததான தினம் |
| * | செப்ரம்பர் | 24 | செவ்வாய் | ஓணம் (வாமண ஜெயந்தி) |
| | செப்ரம்பர் | 27 | வெள்ளி | சீரடி சாயி பாபா பிறந்த தினம் |
| * | அக்டோபர் | 21 | திங்கள் | விஜயதசமி |
| * | நவம்பர் | 10 | ஞாயிறு | தீபாவளி |
| | நவம்பர் | 19 | செவ்வாய் | மகளிர் தினம் |
| ** | நவம்பர் | 2 | சனி மாலை 6 மணி முதல் | உலக அகண்ட நாம பஜனை |
| | | 3 | ஞாயிறு மாலை 6 மணி வரை | |
| * | நவம்பர் | 23 | சனி | பகவான் பாபா பிறந்த தினம் |
| * | டிசம்பர் | 25 | புதன் | கிறிஸ்மஸ் |

* பிரசாந்தி நிலையத்தில் கொண்டாடப்படும் தினங்கள்

** உத்தேச தினங்கள் - மாற்றங்கள் இருப்பின் பின்னர் அறிவிக்கப்படும்

அவதார நாளில்

## வழிகாட்டும்

இன்று முதல் நீங்கள் ஒரு புதிய பாதையை கடைப்பிடிக்க வேண்டும். இணக்கம், கூட்டுறவு, பரஸ்பர நன்மதிப்பு ஆகியவற்றுடன் உங்கள் வாழ்க்கையை நடாத்த வேண்டும்.

வாழ்க்கை என்பது இரண்டு சிறகுகள் கொண்ட பறவை போன்றது என்பதை நீங்கள் உணர வேண்டும். அன்பும், தியாகமும் தான் அந்த இரு சிறகுகள். இந்த இரண்டையும் கொண்டு உன்னத இலக்கை அடைய நீங்கள் முயல வேண்டும்.

இறைவன் எங்கேயிருக்கிறான் எனத் தேடி அறியச் சிரமப்படாமல், கடவுளின் உருவமாக உலாவிக் கொண்டிருக்கும் தாயையும் தந்தையையும் வணங்குவது போதுமானதாகும். அவர்களின் விருப்பங்களுக்கேற்ப நடந்து, திருப்திப்படுத்தி அவர்களது ஆசீர்வாதத்தைப் பெறலாம். நேரடியாகக் கண்ணுக்குப் புலனாகும் தெய்வங்களான பெற்றோர்களைப் புறக்கணித்துவிட்டு கண்ணுக்குப் புலனாகாத தெய்வத்தைத் தேடுவது மாயையாகும்.

இன்று முதல் எமது நிறுவனம் நாளாந்தம் வளர்ந்து முழு உலகையும் உள்ளடக்க வேண்டும். சொந்த நலன்களை ஒதுக்கி வையுங்கள். சமூகநலனே உங்களது முக்கிய அக்கறையாக இருக்க வேண்டும். எந்த இடத்திலோ, எந்த நாட்டிலோ எங்கே இருந்தாலும் அங்குள்ள சேவைப்பணிகளில் பங்குபற்றுங்கள்.

ஸ்ரீமத் நாராயணனுக்குச் சேவை செய்வதற்கு என்ன தேவை இருக்கிறது. அவருக்குச் சேவை செய்யப் பெருந்திரளானவர்கள் இருக்கிறார்கள். உதவிக்கு எவருமற்ற 'தரித்திர நாராயண'ருக்கே நீங்கள் சேவை செய்ய வேண்டும்.

இந்த மகாநாட்டின் முக்கிய செய்தி என்ன? 'தேவை ஏற்படும் போதெல்லாம் சேவை செய்தல்'. வாழ்க்கையைச் சேவைக்காக அர்ப்பணிக்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

## அருள்மொழிகள்

( 23 - 11 - 1995 )

96/65 விநாயகர் தரும நிதிய அச்சகம் — பருத்தித்துறை 08/0644